PROCEEDINGS OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE EXISTING BLACK GRANITE QUARRY LOCATED IN A CLUSTER WITHIN 500 M RADIUS OWNED BY M/S TAMIL NADU MINERALS LIMITED (A GOVT. OF TAMIL NADU UNDERTAKING) IN AN EXTENT OF 6.09.0 HA AT SF NO. 11 PART OF PERUMBAKKAM VILLAGE, VILLAGE, VANUR TALUK, VILLUPURAM DISTRICT ON 12.4.2022 AT 10.30 A.M. IN M/s. P. RAMASAMY SEETHALAKSHMI PALACE THIRUMANA MALIGAI, MAILAM–VANUR ROAD, MAILAM POST, TINDIVANAM TALUK, VILLUPURAM DISTRICT.

1. **Thiru. D. Mohan, IAS**	:	District Collector Villupuram
2. **Thiru.S.Palanisamy**	:	District Environmental Engineer Tamil Nadu Pollution Control Board Villupuram

PROJECT PROPONENT

1. Thiru. E. Ganesan	:	The Deputy Manager, M/s Tamilnadu Minerals Limited (A Govt. of Tamilnadu Undertaking), Perumbakkam Village, Vanur Taluk, Villupuram District

Public attended - 57 Nos. (List enclosed)

At the outset, the District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Villupuram has welcomed the District Collector, Environmentalist and the public present in the public hearing conducted on behalf of Tamilnadu Pollution Control Board. He informed that since the existing Black Granite Quarry located in a cluster within 500 m radius owned by M/s Tamil Nadu Minerals Limited (A Govt. of Tamil Nadu Undertaking) over an extent of 6.09.0 Ha at SF No. 11 Part of Perumbakkam Village, Vanur Taluk, Villupuram District falls under the B1 Category and Schedule 1A of Environment Impact Assessment (EIA) Notification No. S.O 1533 dated 14.09.2006 issued by the Ministry of Environment, Forest and Climate Change, it is necessary to conduct public hearing to obtain environmental clearance for the quarry projects from the State Environment Impact Assessment Authority (SEIAA). He informed that if the total of all existing, expired and proposed quarry lease area lying as cluster within 500m radius exceeds 5 Hectares, public hearing should be conducted for the proposed quarrying activity as per the Environment (Protection) Act, 1986 and the EIA Notification, 2006. He informed that the Public Notices in Times of India (English newspaper) and Dhinakaran (Tamil newspaper) were published on 9.3.2022 with the approval of the District Collector, Villupuram for

the conduct of public hearing meeting on 12.4.2022 at 10.30 AM. The detailed study report on EIA relating to the establishment of proposed quarry project would be presented by the EIA Consultant through power point presentation to the public. The DEE, TPCB, Villupuram has requested the public to offer their views, opinions and suggestions about the proposed project after mentioning their name and place of nativity. He informed that all the views and suggestions raised by the public in the meeting will be recorded in both audio and video and the same would be submitted to the SEIAA for necessary action. After his brief speech, he requested the District Collector to preside over the public hearing meeting.

The DEE, TNPCB, Villupuram has requested the project proponent to present the EIA study report of the existing Black Granite Quarry to the public through the power point presentation in detail.

Mr. E. Ganesan, Deputy Manager, M/s Tamil Nadu Minerals Limited introduced himself and welcomed all the gatherings in the meeting. He explained about the EIA project report of the proposed activity in the existing Black Granite Quarry owned by M/s Tamil Nadu Minerals Limited (A Govt. of Tamil Nadu Undertaking) in an extent of 6.09.0 Ha at SF No. 11 Part of Perumbakkam Village, Vanur Taluk, Villupuram District with the help of power point presentation.

After the technical power point presentation of the EIA study report, the DEE, TNPCB, Villupuram has requested the public present in the meeting to air their views regarding their opinions, doubts, apprehensions and suggestions about the proposed quarry project.

Accordingly, the following public and the Environmentalist have placed their comments, suggestions and questions in the public hearing meeting. The views and suggestions of the public are detailed as below.

PUBLIC VIEWS:

1. Thiru. Rajangam, Village President, Perumbakkam:

He expressed greetings to the District Collector, Government officials and the public gathered in the meeting.

He stated that the TAMIN quarry already excavated around 3750 cubic meter of granite in the existing quarry site. However, their village panchayat had not yet received any development/welfare funds from the profit of M/s. TAMIN Limited. Their village did not get any development or benefit so far due to the functioning of Granite quarry in their village. He also stated that the ancient monumental building was already got affected due to the explosion activity. He complaint that the lake in their village is being blocked by dumping the granite cutting waste materials in it.

2. Mr. E. Ganesan, Deputy Manager, M/s TAMIN Ltd, Villupuram

He replied that the funds will be deposited in the Mining Department itself and also in the District Mineral Trust through which the funds will be distributed to the respective Village Panchayats. Hence, the TAMIN has no rights or provision to give the funds directly to the Village Panchayat. He also said that all the safety precautions had been followed during the explosion activity so as to avoid any damages to the school children and the monumental buildings nearby. However, he said that suitable action will be taken to remove the dumped granite cutting waste materials if any being dumped by the Tamil Nadu Minerals Limited, Villupuram in the said location.

3. District Collector, Villupuram:

The District Collector asked the Tahsildar to inspect the Lake area and take remedial action if any granite cutting waste materials dumped in it by the Tamil Nadu Minerals Limited, Villupuram.

The DEE, TNPCB, Villupuram has again requested the public to speak their views and suggestions if any in this regard. Since there was no response from the public, it was decided to conclude the meeting and he thanked the public gathered. The public hearing meeting came to an end.

The list of public attended the public hearing meeting along with the Audio and Video of the entire proceeding is enclosed.

District Collector
Villupuram

District Environmental Engineer
Tamil Nadu Pollution Control Board,
Villupuram

விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், பெரும்பாக்கம் கிராமம், ச.எண்.11–ல் 6.09.0 ஹெக்டேர் பரப்பளவில் அமைக்க உத்தேசிக்கப்பட்ட தி/ள்.தமிழ்நாடு மினரல்ஸ் லிமிடெட் (தமிழ்நாடு அரசு நிறுவனம்) நிறுவும் திட்டத்திற்கு 12.04.2022 அன்று காலை 10.30 மணியளவில் விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், மைலம் அஞ்சல், மைலம்–வானூர் ரோடு, திரு.பி.ராமசாசி சீதாலட்சுமி பேலஸ் திருமண மாளிகையில் நடைபெற்ற பொது மக்கள் கருத்து கேட்புக் கூட்ட நடவடிக்கை விபரங்கள்.

1. திரு.D.மோகன், IAS — மாவட்ட ஆட்சியர்,
விழுப்புரம் மாவட்டம்.

2. திரு.S.பழனிசாமி : மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
விழுப்புரம் மாவட்டம்.

நிறுவனத்தினர்

1. திரு.E.கணேசன் : துணை மேலாளர்,
திரு.தமிழ்நாடு மினரல்ஸ் லிமிடெட்
(தமிழ்நாடு அரசு நிறுவனம்),
பெரும்பாக்கம் நிறுவனம்,
வானூர் வட்டம்,
விழுப்புரம் மாவட்டம்.

பங்கேற்ற பொதுமக்கள் – 57 நபர்கள். (இணைப்பு)

கூட்டத்தின் துவக்கத்தில் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விழுப்புரம் அவர்கள் கருத்து கேட்புக் கூட்டத்திற்கு வருகை தந்த மாவட்ட ஆட்சியர், சுற்றுச்சூழல் மற்றும் சமூக ஆர்வளர்கள் மற்றும் பொதுமக்களை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பாக வரவேற்று, இக்கூட்டத்தின் நோக்கம், செயல்பாடு மற்றும் நடைமுறைகள் குறித்து பின்வருமாறு எடுத்துரைத்தார். விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், பெரும்பாக்கம் கிராமம், ச.எண்.11–ல் 6.09.0 ஹெக்டேர் பரப்பளவில் அமைக்க உத்தேசிக்கப்பட்ட திரு.தமிழ்நாடு மினரல்ஸ் லிமிடெட்க்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்கு சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை அமைச்சகத்தினால் வெளியிடப்பட்ட 14.09.2006 தேதியிட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிப்பு எண் SO 1533 இன் பி1 வகை மற்றும் அட்டவணை 1 ஏ இன் கீழ் இந்த திட்டம் வருவதால் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்துவது அவசியமானதாகும். இதன் பொருட்டு, மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் வழிக்காட்டுதலின் படி மேற்கூறிய திட்டத்திற்கான பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் இன்று நடத்தப்படுகிறது. மாவட்ட ஆட்சியர், விழுப்புரம் அவர்களின் ஒப்புதலுடன் இன்று 12.04.2022 10.30 AM மணிக்கு பொதுமக்களின் கருத்துக்கேட்பு கூட்டம்

நடத்துவதற்காக தமிழ் (தினகரன்) மற்றும் ஆங்கிலம் (டைம்ஸ் ஆஃப் இந்தியா) தினசரி செய்தித்தாள்களில் பொது அறிவிப்புகள் 09.03.2022 அன்று வெளியிடப்பட்டன. குவாரி நிறுவுதல் தொடர்பான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு குறித்த விரிவான ஆய்வு அறிக்கையை பவர் பாயிண்ட் விளக்க காட்சி மூலம் EIA திட்ட ஆலோசகரால் வழங்கப்படும் என்று தெரிவித்தார். EIA திட்ட ஆலோசகர் அவர்கள் இத்திட்டத்தின் மீது எழுப்பப்படும் கேள்விகள், கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளுக்கு விளக்கம் அளிப்பார்கள். மேலும் குவாரி நிறுவுதல் திட்டத்தை பற்றிய கருத்துகள் மற்றும் பரிந்துரைகளை வழங்கும்போது பொதுமக்கள் தங்களுடைய பெயர் மற்றும் இடம் ஆகியவற்றை குறிப்பிட்டுவிட்டு தெரிவிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். கூட்டத்தில் பொதுமக்கள் எழுப்பிய அனைத்து கருத்துகளும், பரிந்துரைகளும் மற்றும் EIA திட்ட ஆலோசகர் அளித்த விளக்கங்களும், ஆடியோ மற்றும் வீடியோ இரண்டிலும் பதிவு செய்யப்படும் என்றும், பின் அவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திடம் சமர்ப்பிக்கப்படும் என்றும் தெரிவித்து, பின்னர் பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு மாவட்ட ஆட்சியர், விழுப்புரம் அவர்களை தலைமை தாங்கி நடத்தித் தருமாறு கேட்டுக்கொண்டார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம், விழுப்புரம் அவர்கள் தற்போதுள்ள பிளாக் கிரானைட் குவாரியின் EIA ஆய்வு அறிக்கையை பவர் பாயிண்ட் விளக்கக்காட்சியின் மூலம் பொதுமக்களுக்கு விரிவாக வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

திரு.E.கணேசன், துணை மேலாளர், தமிழ்நாடு மினரல்ஸ் லிமிடெட் அவர்கள் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு கூட்டத்தில் கூடியிருந்த அனைவரையும் வரவேற்றார். பவர் பாயிண்ட் விளக்கக்காட்சியின் உதவியுடன் விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், பெரும்பாக்கம் கிராமம், ச.எண்.11–ல் 6.09.0 ஹெக்டேர் பரப்பளவில் அமைக்க உத்தேசிக்கப்பட்ட திரு.தமிழ்நாடு மினரல்ஸ் லிமிடெட்க்கு சொந்தமான பிளாக் கிரானைட் குவாரியில் உத்தேச நடவடிக்கையின் EIA திட்டம் குறித்து விளக்கினார்.

EIA திட்ட ஆலோசகரின் தொழில்நுட்ப விளக்கவுரைக்கு பிறகு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விழுப்புரம் அவர்கள், கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்களை அமையவிருக்கும் இத்திட்டத்தின் சுற்றுச்சூழல் தாக்கங்கள் குறித்து தங்கள் கருத்துக்கள், சந்தேகங்கள், அச்சங்கள் மற்றும் குவாரி திட்டம் குறித்த பரிந்துரைகளை தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

அதன்படி, கீழ்காணும் பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வளர்கள் பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தில் தங்கள் கருத்துகளையும் கேள்விகளையும் எழுப்பியுள்ளனர். பொதுமக்களின் கருத்துகள் மற்றும் பரிந்துரைகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

பொது பார்வையாளர்கள்

1.திரு.ராஜாங்கம், கிராம தலைவர், பெரும்பாக்கம்.

மாவட்ட ஆட்சியர், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் அனைவருக்கும் இவர் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டார்.

தற்போதுள்ள குவாரியில் தமிழ்நாடு மினரல்ஸ் லிமிடெட் ஏற்கனவே 3750 கன மீட்டர் கிரானைட் தோண்டியுள்ளதாக இவர் கூறினார். இருப்பினும், தனது கிராம பஞ்சாயத்துக்கு எந்த வளர்ச்சியும் நல திட்டமும் பெறவில்லை என்றும் தங்களது கிராமத்தில் கிரானைட் குவாரி செயல்பட்டதால் இதுவரை எந்த ஒரு வளர்ச்சியோ, பலனோ இந்த கிராமத்திற்கு கிடைக்கவில்லை என்று கூறினார். வெடிப்பு நடவடிக்கை காரணமாக பழங்கால நினைவுச்சின்ன கட்டிடம் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தங்கள் கிராமத்தில் உள்ள ஏரியில் கிரானைட் வெட்டி கழிவுப்பொருட்களை கொட்டிவருவதாகவும் கூறினார்.

2. திரு.E.கணேசன், துணை மேலாளர், தமிழ்நாடு மினரல்ஸ் லிமிடெட், விழுப்புரம்.

இந்த நிதியானது சுரங்கத்துறையிலும் மாவட்ட கனிம அறக்கட்டளையிலும் வைப்பு வைக்கப்படும் என்றும் அதன் மூலம் அந்தந்த ஊராட்சிகளுக்கு நிதி விநியோகிக்கப்படும் என்றும் அவர் கூறினார். எனவே, கிராமப் பஞ்சாயத்துக்கு நேரடியாக நிதி வழங்குவதற்கு தமிழ்நாடு மினரல்ஸ் லிமிடெட்டிற்கு எந்த உரிமையும் இல்லை என்றும் கூறினார். வெடிப்பு நடவடிக்கையின் போது பள்ளி மாணவர்களுக்கும், அருகில் உள்ள நினைவுச்சின்ன கட்டிடங்களுக்கும் எந்த பாதிப்பும் ஏற்படாமல் இருக்க அனைத்து பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் பின்பற்றப்பட்டதாகவும் அவர் கூறினார். இருப்பினும் விழுப்புரத்தில் உள்ள தமிழ்நாடு மினரல்ஸ் லிமிடெட் மூலம் கொட்டப்பட்டிருக்கும் கிரானைட் கழிவுப்பொருட்களை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்.

3.மாவட்ட ஆட்சியர், விழுப்புரம்.

விழுப்புரத்தில் உள்ள தமிழ்நாடு மினரல்ஸ் லிமிடெட் மூலம் ஏரிப்பகுதியில் கிரானைட் வெட்டி கழிவுப்பொருட்கள் கொட்டப்பட்டிருந்தால் அதற்குறிய நடவடிக்கைகளை எடுக்குமாறு தாசில்தாரை மாவட்ட ஆட்சியர் கேட்டுக்கொண்டார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம், விழுப்புரம் அவர்கள் இதுகுறித்த பொதுமக்கள் தங்கள் கருத்துகள் மற்றும் ஆலோசனைகள் இருந்தால் தெரிவிக்குமாறு கூறினார். பொதுமக்களிடமிருந்து எந்த பதிலும் வராததால் கூட்டத்தை முடித்துக்கொள்ள முடிவு செய்யப்பட்டு கூட்டத்தில் கலந்துக்கொண்ட பொதுமக்களுக்கு அவர் நன்றியை தெரிவித்தவுடன் கருத்துக்கேட்பு கூட்டம் முடிவுற்றது.

பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்களின் வருகை பதிவேடு, கூட்டத்தில் பதிவு செய்யப்பட்ட புகைப்படம் அடங்கிய குறுந்தகடு (CD) மற்றும் காணொளி (Video graph) ஆகியவை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சியர்
விழுப்புரம் மாவட்டம்

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்
தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம்
விழுப்புரம் மாவட்டம்